ஸ்ரீ திரிபுரசுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

रागोद्रेकाद्धनिनमसकृद्वीक्षितुं दृङ्मुदा तत्-
सल्लापे च प्रविशति च वाक्द्राक्तथा मे मनोऽपि ।
तद्ध्यानाय प्रसभमहह क्षुद्रमार्गस्थमेतत्
रोद्धुं चालं पुरहर कथं त्वत्कृपामन्तरा स्याम् ॥ ८ ॥

𑌰𑌾𑌗𑍋𑌦𑍍𑌰𑍇𑌕𑌾𑌦𑍍𑌧𑌨𑌿𑌨𑌮𑌸𑌕𑍃𑌦𑍍𑌵𑍀𑌕𑍍𑌷𑌿𑌤𑍁𑌂 𑌦𑍃𑌙𑍍𑌮𑍁𑌦𑌾 𑌤𑌤𑍍
𑌸𑌲𑍍𑌲𑌾𑌪𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌤𑌿 𑌚 𑌵𑌾𑌕𑍍 𑌦𑍍𑌰𑌾𑌕𑍍 𑌤𑌥𑌾 𑌮𑍇 𑌮𑌨𑍋𑌽𑌪𑌿 ।
𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌯 𑌪𑍍𑌰𑌸𑌭𑌮𑌹𑌹 𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌥𑌮𑍇𑌤𑌤𑍍
𑌰𑍋𑌦𑍍𑌧𑍁𑌂 𑌚𑌾𑌲𑌂 𑌪𑍁𑌰𑌹𑌰 𑌕𑌥𑌂 𑌤𑍍𑌵𑌤𑍍𑌕𑍃𑌪𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑌾 𑌸𑍍𑌯𑌾𑌮𑍍 ।

பொருள் ஸம்பாதிப்பதிலிருக்கும் ஆசையின் மேலீட்டால் என்னுடைய நேத்திரமானது தனிகனை அடிக்கடி பார்க்கவேண்டுமென்று போகிறது. அவனோடு வார்த்தைகள் பேசவேண்டுமென்கிற விருப்பங்கொண்டு ஸந்தோஷமாக என் வாக்கும் செல்லுகின்றது. அவ்விதமே என் மனமும் அவனைத்தியானம்செய்ய முயலுகின்றது. இதைக் காட்டிலும் பெரிதான கஷ்டம் வேறு என்ன வேண்டும். கெட்ட வழிகளில் பற்றுதலையடைந்த இந்திரிய ஸமூஹத்தை हे पुरहर 𑌹𑍇 𑌪𑍁𑌰𑌹𑌰 மிகவும் துஷ்டர்களான திரிபுராசுரர்களை வதம் செய்து ஜகத்தைப் பாதுகாத்த ஹே சம்போ ! உமது கிருபையில்லாவிட்டால் என்னால் எப்படித் திருப்பமுடியும்; ஆகையால் தாங்கள் தயவு செய்து என் இந்திரியங்களை நல்வழிகளில் செல்லும்படி அனுக்கிரகிக்கவேண்டும்.

உலகில் பொதுவாய் பொருள்வேண்டுமென்கிற அவா ஸகல ஜனங்களுக்கும் அதிகமாயிருக்கென்பது பிரஸித்தமே. அதினால் ஒருவன் பொருள் பெற்றிருந்தால் அது நமக்குக் கிடைக்கும், கிடைக்காதென்கிற விவேகமில்லாமல் அவனிடமிருக்கும் பொருளையடைய வேண்டி பலாத்காரமாக எல்லா எல்லா இந்திரியங்களும் அவனிடம் செல்லுகின்றன. அவைகளைத் திருப்பி மோக்ஷஸாதனமான மார்க்கத்தில் போகும்படி செய்யவேண்டுமென்று பகவானிடம் பிரார்த்திக்கிறார். சுபம்.

உபபத்திராதிபர்,

308

# ஆர்யதர்மம்.

விபவ-ஹு ஆடி-மீ 4உ

## "உபதேசபஞ்சகம்"

(290-வது பக்கத்தொடர்ச்சி.)

**भगवतो भक्तिर्दृढाधीयताम्** ஸ்ரீமத் பகவத்கீதை ப்ராயோபதேசம்

உழுது களைகளைப் பிடுங்கிப் பக்வமாயிருக்கும் நிலத்தில் எவ்வித விதையைத் தெளித்தாலும் உடனே முளைத்து தளிர்த்துப் பயிராவதுபோல் ஸாதுஸங்கத்தால் சுத்தமாயிருக்கும். சித்தபூமியில் விஷயமென்கிற எவ்வித விதையைத் தெளித்தாலும் அது நன்கு பயிராகுமென்பது ஆக்ஷேபமில்லை. அவ்வித சுத்தமான சித்தபூமியில் துக்கத்திற்குக் காரணங்களான கெட்ட விதைகளைத்தெளித்துப்பயிரிட்டுப்பிறகு கஷ்டத்தையடைவது உசிதமில்லை. பின்னை உத்தமபலத்தை யளிக்கும் சிறந்த விதையை விதைக்க வேண்டும். அது, எதுவென்றால்? பகவத்பக்திதான். பகவத்பக்தி என்கிற இந்த சிரேஷ்டமானவிதையை விதைத்தால், நன்குபயிராகி ஸகல பலங்களையும் கொடுக்கும். அற்பம்கூட துக்கம் ஏற்படாது, இங்குஇன்னதேவதையைஎன்று குறிப்பிட்டுகாட்டாமல்பொதுவாய் பகவத்பக்திஎன்று கூறியிருப்பதால் எவரெவர்களுக்கு எந்தெந்த தேவதைகளிடம் இயற்கையான பிரீதியால் பக்தி ஏற்பட்டிருக்கின்றதோ? அந்ததேவதையிடம் விதியையனுசரித்து பக்தி செய்யலாமென்றும், பெரிது, சிறிது என்கிறவிவாதத்திற்கு அற்பமேனும் இடமில்லை என்றும் அறிவிக்கப்படுகின்றது. இந்தஅபிப்பிராயத்தைத்தான் கீதாசாஸ்திரத்திலும்

**यो यो यां यां तनुं भक्तः श्रद्धयार्चितुमिच्छति ।**

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி ।

எவனெவன். எந்தெந்த தேவதையைசிரத்தையுடன் ஆராதிக்கஇச்சிக்கிறானோ. அந்ததேவதாரூபமாகநானிருந்துகொண்டு அவனுக்கு வேண்டியதைக்கொடுக்கிறேன் என்று, பகவான் வெளியிட்டிருக்கிறார். ஆகையால். ஒரே மூர்த்தியே கார்ய பேதத்தால் பலநாமங்களையடைந்திருப்பதால் எதை யுபாஸித்தாலும்: பேதமில்லை. என்று ஏற்படுகின்றது. **दृढाधीयताम्** த்ருடாதீயதாம் என்று சொல்லியிருப்பதால் எப்பொழுதும் இடைவிடாமல் ஸ்ரீ பகவானுடைய சாரணாரவிந்தங்களையே தியானம் செய்யவேண்டுமென்றும் அனாவச்யமான காரியங்களில் ப்ரவேசித்து ஜன்மாவை வீண் பண்ணக்கூடாதென்றும் அறிவிக்கப்படுகிறது.

(தொடரும்) உபபத்திராதிபர்

309

# ஹிந்து விவாஹரத்து மசோதா.

இப்பெயர் வாய்ந்தமசோதா ஒன்று (22-3-28) ல் டாக்டர் ஹரிஸிங் கவர் என்பவரால் டில்லி அகில இந்திய சட்டஸபையில் கொண்டுவரப்பட்டு, இதைச்சட்டமாகச்செய்யும் விஷயத்தில் ஹிந்துக்களின் அபிப்பிராயத்தையறிந்துதெரிவிக்கும்படி ஜில்லா கலெக்டர்களுக்கு கவர்ன்மெண்டார் அறிக்கைவெளியிட்டிருக்கிறார்கள்.

விவாஹமானவன் நபும்ஸகனாகவாவது, சித்தஸ்வாதீனமில்லாதவனாகவாவது, குஷ்டரோகியாகவாவது இருந்தால் விவாஹத்தை ரத்து செய்துகொண்டு அவன் மனைவி அவனை விட்டு விலக்கிக்கொள்ள பாத்தியம் கொடுக்கப்படவேண்டுமென்பது இம்மசோதாவின் கோரிக்கை.

இம்மசோதாவிற்கனுகூலமாக டாக்டர் கவர் கூறும் காரணங்கள்:— "இந்து லா பிரகாரம் விவாஹத்தின் முக்கியநோக்கம் ஒரு ஆண்பிள்ளை பெறுவது. புருஷன் நபும்ஸகனாகவாவது, பைத்தியம் பிடித்தவனாகவாவது இருந்தால் மனைவி வேறு ஒருவனுடன் சேர்ந்து பிள்ளை பெற நியோகம் என்ற ஏற்பாடிருந்து வந்தது. அது இப்பொழுது அனுஷ்டானத்தில் இல்லை. நியோகம் என்பதை அவள் அநுஸரிக்க முடியாத நிலைமையில் அவள் கௌரவமாக நடந்து கொள்வதற்கு இருக்கும் ஒரே வழி; அப்படிப்பட்ட விவாஹத்தை ரத்துசெய்து கொள்வது தான். தவிர, மேற்சொல்லிய வியாதிகளால் பீடிக்கப்பட்டவனுக்கும் அவள் மனைவிக்கும் ஸொத்துகளில் எவ்வித பாத்தியமும் இல்லை. ஆகையால் இம்மசோதா மனைவிக்கு ஸ்பஷ்டமாய் கிடைக்கவேண்டிய பாத்தியத்தைக் கொடுப்பதாக ஆகும். இம்மசோதாவின் நோக்கம்- ஹிந்து விவாஹங்களில் எவ்வித மாறுதலையும் உண்டாக்கவேண்டுமென்றல்ல. இது சட்டமாக ஏற்பட்டால் நாரதஸ்மிருதி வஸிஷ்ட ஸ்மிருதிகளில் சொல்லிய புராதன வழக்கத்தை இப்பொழுது அநுஷ்டானத்துக்கு கொண்டுவருவதாக ஆகும்."

டாக்டர் கவர்கூறும் ஸ்மிருதிவசனங்கள்:—

நாரதஸ்மிருதி அத்தியாயம் 12-ல்

यस्याप्सु प्लवते बीजं ह्लादिमूत्रं च फेनिलम् ।
पुमान्स्याल्लक्षणैरेतैर्विपरीतस्तु षण्डकः ॥

𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌸𑍁 𑌪𑍍𑌲𑌵𑌤𑍇 𑌬𑍀𑌜𑌂 𑌹𑍍𑌲𑌾𑌦𑌿 𑌮𑍂𑌤𑍍𑌰𑌂 𑌚 𑌫𑍇𑌨𑌿𑌲𑌮𑍍 ।
𑌪𑍁𑌮𑌾𑌨𑍍𑌸𑍍𑌯𑌾𑌲𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑍈𑌰𑍇𑌤𑍈𑌰𑍍𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑍍𑌤𑍁 𑌷𑌣𑍍𑌢𑌕𑌃 ॥

தண்ணீரில் எவனுடைய பீஜம் மிதக்கிறதோ எவனுடையமூத்ரம் "சர்" என்ற சப்தத்துடன்வெளிப்பட்டு நுரையை உண்டுபண்ணுகிறதோ அவன் ஆண் தன்மை உடையவன்; இல்லாவிட்டால் நபும்ஸகன். ச்லோகம் 8.

आक्षिप्तमोघबीजाभ्यां कृतेऽपि पतिकर्मणि ।
पतिरन्यः स्मृतो नार्या वत्सरार्धं परीक्ष्य तु ॥

𑌆𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌤𑌮𑍋𑌘𑌬𑍀𑌜𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌕𑍃𑌤𑍇𑌽𑌪𑌿 𑌪𑌤𑌿𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ।
𑌪𑌤𑌿𑌰𑌨𑍍𑌯𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑍋 𑌨𑌾𑌰𑍍𑌯𑌾 𑌵𑌤𑍍𑌸𑌰𑌾𑌰𑍍𑌧𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌤𑍁 ॥

ஆக்ஷிப்தன் (ரேதஸை அடக்கிவருவதால் போக சக்தி குறைந்தவன்) மோகபீஜன் (கர்ப்பந்தரிப்பதற்குறிய வீர்யமற்ற ரேதஸுடையவன்) இவ்விரு நபும்ஸகர்களையும் கணவனாக அடைந்த ஸ்திரீகள் ஆறுமாஸம் வரையில் பரீக்ஷித்துப் பார்த்தும் பிரயோஜனப்படாவிட்டால் வேறு புருஷனை விவாஹம் செய்து கொள்ளலாம். ச்லோகம் 16.

अपत्यार्थं स्त्रियः सृष्टाः स्त्री क्षेत्रं बीजिनो नराः ।
क्षेत्रं बीजवते देयं नाबीजः क्षेत्रमर्हति ॥

𑌅𑌪𑌤𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 𑌸𑍃𑌷𑍍𑌟𑌾𑌃 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌬𑍀𑌜𑌿𑌨𑍋 𑌨𑌰𑌾𑌃 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 𑌬𑍀𑌜𑌵𑌤𑍇 𑌦𑍇𑌯𑌂 𑌨𑌾𑌬𑍀𑌜𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑌰𑍍𑌹𑌤𑌿 ॥

பிரஜோத்பத்திக்காக ஸ்திரீகள் ஸிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். ஸ்திரீ, க்ஷேத்ரம் (பூமி). புருஷன் விதையை உடையவன். விதையையுடையவனுக்கு க்ஷேத்ரம் கொடுக்கப்படவேண்டும். விதையில்லாதவனுக்கு க்ஷேத்ரம் கொடுக்கப்படாது. ச்லோ 19.

प्रतिगृह्य तु यः कन्यां वरो देशान्तरं गतः ।
त्रीन् ऋतून् समतिक्रम्य कन्याऽन्यं वरयेद्वरम् ॥

𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑍁 𑌯𑌃 𑌕𑌨𑍍𑌯𑌾𑌂 𑌵𑌰𑍋 𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌗𑌤𑌃 ।
𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 𑌋𑌤𑍂𑌨𑍍 𑌸𑌮𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑍍𑌯 𑌕𑌨𑍍𑌯𑌾𑌽𑌨𑍍𑌯𑌂 𑌵𑌰𑌯𑍇𑌦𑍍𑌵𑌰𑌮𑍍 ॥

ஒரு பெண்ணை நிச்சயம் செய்துவிட்டு வெளியூர் சென்றவான் திரும்பி வாராவிட்டால், 6௴ காத்திருந்து அதற்குப் பிறகு அப்பெண் வேறு புருஷனை விவாஹம் செய்துகொள்க. ச்லோ 24.

ச்லோகம் 37. நாரதஸ்மிருதி ஸம்ஸ்க்ருதம் கல்கத்தாவில் ஏஷியாடிக்ஸொஸைடியால் 1885–86ல் நாகரலிபியில் பிரசுரம் செய்யப்பட்டது. இப்பொழுது அந்த புஸ்தகம் கிடைக்காதபடியால் இதன் தமிழ் அர்த்தத்தை மாத்திரம் இங்கு குறிப்பிட்டிருக்கிறது.

பைத்தியம் பிடித்தவன், ஜாதிப்ரஷ்டன், நபும்ஸகன், கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவன், பந்துக்களால், விடப்பட்டவன், அபஸ்மார வியாதியுள்ளவன், அங்கஹீனன், இவைகள் வரனுடைய தோஷங்கள்.

नष्टे मृते प्रव्रजिते क्लीबे च पतिते पतौ ।

पञ्चस्वापत्सु नारीणां पतिरन्यो विधीयते ॥

நஷ்டே ம்ருதே ப்ரவ்ரஜிதே க்லீபே ச பதிதே பதௌ ।

பஞ்சஸ்வாபத்ஸு நாரீணாம் பதிரந்யோ விதீயதே ॥

நிச்சயிக்கப்பட்ட புருஷன் காணமற்போய்விட்டாலும், இறந்துவிட்டாலும் ஸந்யாஸம் பெற்றுக்கொண்டாலும் நபும்ஸகனென்று தெரிந்தாலும் ஜாதிப்ரஷ்டனாகிவிட்டாலும் இந்த ஐந்து ஆபத்துக்களிலும்ஸ்திரீகளுக்குவேறுபுருஷன்விதிக்கப்படுகிறது. ச்லோ 97.

வஸிஷ்டஸ்மிருதி அத்தியாயம் 17-ல் வசனம் 20.

या च क्लीबं पतितमुन्मत्तं वा भर्तारमुत्सृज्यान्यं पतिं विन्दते मृते वा सा पुनर्भूर्भवति । யா ச க்லீபம் பதிதமுந்மத்தம் வா பர்த்தாரமுத்ஸ்ருஜ்யாந்யம் பதிம் விந்ததே ம்ருதே வா ஸா புநர்ப்பூர்ப்பவதி ।

நபும்ஸகன் ஜாதிப்ரஷ்டன் அல்லது பைத்தியம்பிடித்த கணவனை விட்டுவிட்டாவது அல்லது கணவன் இறந்தபிறகாவது வேறு புருஷனை அடைகிறவள் புநர்ப்பூ (மறுபடியும் மனைவியாக ஆனவள்) என்று சொல்லப்படுகிறாள்.

## இதற்கு நமது ஸமாதானம்.

ஹிந்துமதம் வேதத்தை ஆதாரமாகவுடையது. வேதம் அநாதியென்பதும் அபௌருஷேயமென்பதும் ஹிந்துக்களின் துணிபு. வேதத்திற்கு அடுத்த ப்ரமாணம் ஸ்மிருதிகள். ஸ்மிருதிகள் ஈசுவராம்சம் பெற்ற மநு, யாக்ஞவல்க்யர், பாராசரர் முதலிய

மஹரிஷிகளால் வேதத்தை அநுஸரித்து வெளியிடப்பட்டு பாரம் பரையாய் அநுஷ்டானத்திலிருந்து வருகின்றன.

ஸ்மிருதிகளில் முதன்மைபெற்றது மநு. கியாதிபெற்ற குல்லூகபட்டர், தான் செய்த மநுஸ்மிருதிவியாக்யானத்தில் முதலாவது அத்யாயம் முதல்சுலோகத்தின் வியாக்யானத்தில் "மநு வேதத்தின் கருத்தை வெளியிடுவதால் முதன்மைபெற்றது. மநுவின் கொள்கைக்கு விரோதமான எந்த ஸ்மிருதிகளும் கௌரவிக்கத் தக்கவையல்ல. இதர சாஸ்திரங்களும் தர்க்கவியாகரணங்களும் தர்மம், அர்த்தம் மோக்ஷத்தை உபதேசிக்கும் மநுஸ்மிருதிக்கு அநுகூலமானவரையில் மட்டுந்தான் ப்ரமாணங்கள்" என்று ப்ரஹஸ்பதிஸ்மிருதியிலிருந்து இரண்டு வசனங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்.

யாக்ஞவல்க்யஸ்மிருதி முதல் அத்யாயம் சுலோகங்கள் 4, 5 லும் பாராசரஸ்மிருதி முதல் அத்தியாயம் ச்லோகங்கள் 12—15-வரையிலும் சொல்லியிருக்கும் முக்யஸ்மிருதிகளின் பெயர்களில் நாரதஸ்மிருதி காணப்படவில்லை.

டாக்டர் கவர் நாரதஸ்மிருதிவசனங்களின் மொழிபெயர்ப்புகளை ஜூலியஸ் ஜால்லி என்பவர் செய்த இங்கிலீஷ் மொழிபெயர்ப்பிலிருந்து எடுத்துக்கூறுகிறார். ஜூலியஸ் ஜால்லி நாரதஸ்மிருதியை உபஸ்மிருதி என்ற பிரிவில் சேர்த்திருக்கிறார்.

டாக்டர் கவர் தான் கூறிய ஸ்மிருதிவசனங்கள் ஸ்திரீ புருஷன் விவாஹம் செய்துகொண்டபிறகு புருஷனிடத்தில் காணப்படும் தோஷங்களைப்பற்றிச் சொல்வதாக அபிப்ராயப்படுகிறார். அது முற்றிலும் தவறு.

நாரதஸ்மிருதி அத்யாயம் 12, ச்லோகங்கள் 8, 19, 37, 97 இந்நான்கும் ஒரு வரனைத் தேர்ந்தெடுப்பதில் வரனிடத்தில் மேற்சொல்லிய தோஷங்களில்லாமலிருக்கவேண்டுமென்றும், விவாஹ பூர்த்தியாகிய ஸப்தபதி (அம்மி மிதித்தல்) க்கு முன் வரனிடத்தில் இவ்வித தோஷங்களிருப்பதாகத் தெரியவந்தால் அந்த வரனை நீக்கி வேறு வரனுக்குப் பெண்ணை விவாஹம் செய்விக்கவேண்டுமென்றும் கூறுகின்றன.

ஷை ச்லோகம் 24, ஒரு பெண்ணை விவாஹம் செய்துகொள்வதாக நிச்சயித்து அதற்காக கந்யாசுல்கம் (பரிசம்) கொடுத்து

விட்டு தேசாந்தரம்போனவரன் குறிப்பிட்ட காலத்தில் திரும்பி வந்து கல்யாணம் செய்துகொள்ளாததைப்பற்றிச் சொல்லியது.

ஷை ச்லோகம் 16, இந்த ச்லோகத்தில் சொல்லியது யுகாந்தர விஷயம். வியாஸர்:—

ऊढायाः पुनरुद्वाहं ज्येष्ठांशं गोवधं तथा ।
कलौ पञ्च न कुर्वीत भ्रातृजायां कमण्डलुम् ॥

ஊடா4யா꞉ புநருத்3வாஹம் ஜ்யேஷ்டா2ம்ஶம் கோ3வத4ம் ததா2 ।
கலௌ பஞ்ச ந குர்வீத ப்4ராத்ருஜாயாம் கமண்ட3லும் ।

ஒரு தடவை விவாஹமானவளை மறுமுறை விவாஹம் செய்வது, ஸந்ததியில்லாத ஸஹோதரன் மனைவியிடம் புத்திரனை உண்டுபண்ணுவது(நியோகம்) முதலியன கலியுகத்திற்குத் தகாதவை.

வஸிஷ்டஸ்மிருதி அத்யாயம் 17, ச்லோகம் 20. இதில் சொல்லிய விஷயமும் ஸப்தபதிக்குமுன் வரனிடத்தில் இவ்வித தோஷங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த வரனை நீக்கிவிட்டு வேறுவரனுக்குப் பெண்ணை விவாஹம் செய்விக்கலாம் என்பதைக் கூறுகிறது. போதாயன ஸூத்ரம்:—

वाग्दत्ता मनोदत्ता अग्निं परिगता सप्तमं पदन्नीता भुक्ता गृहीतगर्भा प्रसूताचेति सप्तविधा पुनर्भूः । வாக்3த3த்தா மநோத3த்தா அக்3நிம் பரிக3தா ஸப்தமம் பத3ந்நீதா பு4க்தா க்3ருஹீதக3ர்பா4 ப்ரஸூதாசேதி ஸப்தவிதா4 புநர்பூ4꞉ ।

மேலே சொல்லியபடி புநர்ப்பூ எழுவகை. இதில் "ஸப்தமம்பதம் நீதா என்பதற்கு முந்தின மூன்று புநர்ப்பூக்களுக்கும் விவாஹம் செய்விக்கலாம். பெண்ணை பலாத்காரமாய்க் கொண்டுபோய் விவாஹம் செய்வித்திருந்தாலும் ஸப்தபதிக்ரியை பூர்த்தியாகிவிட்டால் அவளை மறுபடி வேறு வரனுக்கு விவாஹம் செய்விக்கக் கூடாது. (பம்பாயில் 1904-ம் வருஷத்தில் ஜனார்த்தனமஹார்தேவ குர்ஜாசர்மா என்பவரால் பிரசுரிக்கப்பட்ட "காசிநாதோபாத்தியாயர் இயற்றிய தர்மஸிந்து" பக்கம் 170 பார்க்கவும்.)

விவாஹத்தின் முக்கிய நோக்கம் புருஷன் ஒரு கன்னிகையை விவாஹம்செய்து கிருஹஸ்தாச்ரமத்தில் மதஸம்பந்தமான கடமைகளைச் செய்வது. மநு அத்யாயம் ௩, ச்லோகம் 80, 81.

ஒரு புருஷப்ரஜை உற்பத்தி செய்வதென்பது அடுத்த நோக்கம். இது புருஷனுக்குத்தான் விதிக்கப்பட்டிருக்கிறது.
மநு அத்யாயம் 3, ச்லோகம் 37, 38, அத். 9 ச்லோ. 81.

கணவன் ஜீவித்திருந்தாலும், இறந்தாலும் ஒரு புருஷப்ரஜையை உண்டுபண்ணிக்கொள்ளவேண்டுமென்று ஸ்திரீக்கு விதிக்கப்படவே இல்லை. கணவன் ஜீவதசையிலிருக்கும்வரையில் அவனை தெய்வமாக நினைத்து இயன்ற சுச்ரூஷை செய்வதும் அவன் இறந்தால் ஸ்திரீ ப்ரஹ்மசர்யத்தையும் அநுஷ்டிக்கவேண்டுமென்று கண்டிப்பாய் விதிக்கப்பட்டிருக்கிறது.

மநு அத்யாயம் 5, ச்லோகம் 154—160.

கணவனை உதாஸீனம் செய்து வியபிசாரத்தால் ஒரு புருஷப்பிரஜையைஅடைவதும், வேறு ஒருவனை விவாஹம் செய்துகொள்வதும் கூடாதென்று ஸ்திரீகள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மநு, அத். 5, ச்லோ. 161, 162,

கணவனை உதாஸீனம் செய்து வியபிசாரம் செய்யும் ஸ்திரீ இஹத்திலும் நிந்திக்கப்பட்டு இறந்தபின் குள்ள நரியாகப்பிறந்து அனேக அபஸ்மார ரோகங்களையும் அநுபவிப்பாள். மநு. அத் 9. ச்லோகம் 30

கணவன் தன் ஸ்திரீயை விற்றுவிட்டாலும், விட்டுவிட்டாலும் ஸ்திரீ கணவனிடமிருந்து விடுபட்டவளல்ல என்பது ப்ரஹ்மாவால் ஆதிகாலத்திலே ஏற்படுத்திய விதி. மநு. அத். 9. ச்லோ 46

வேதம், ஸ்மிருதி, ஸாதுக்களுடைய ஆசாரம், தனது அந்தராத்மாவின் திருப்தி இந்நான்கும் தர்மத்தின் லக்ஷணம். மநு அத். 2. 12.

இன்னும் இவைபோன்ற எண்ணிறந்த ப்ரமாணங்கள் இதர ஸ்மிருதிகளிலும் ஸ்ரீமத்ராமாயணத்திலும், மஹாபாரதத்திலும், காணப்படுகின்றன.

மநுஸ்மிருதி அத்தியாயம் 9 சுலோகங்கள் 64-முதல் 68-வரையில் நியோகம் என்பது என்னவென்று விவரிக்கப்பட்டும் அது கூடாதென்று கண்டிக்கப்பட்டுமிருக்கிறது. நியோகத்தை விதிப்படி அநுஷ்டிப்பதற்கு முன் யுகங்களில் மனிதர்கள் தபஸோடும், ஞானத்தோடுங்கூடியிருந்தார்கள். புராதனரிஷிகளால் புத்திரர்கள் பலவிதமாக உத்பத்தி செய்யப்பட்டிருக்கிறார்கள்.

கலியுகத்தில் மனிதர்களுக்கு அவ்வித சக்தியில்லாததால் நியோகம் கூடாதென மனுவே தடை செய்திருக்கிறார் என்ற அர்த்தம் கொண்ட மூன்று சுலோகங்களை ப்ருஹஸ்பதி ஸ்மிருதியிலிருந்து குல்லூகபட்டர், ராகவானந்தர், நந்தனர், இம்மூவரும் ஷை 68-வது சுலோகத்திற்கு தாங்கள் செய்த வியாக்கியானங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள்

நியோகம் நடைபெற்ற காலத்தில் சொல்லப்பட்டிருக்கும் நிபந்தனைகளையும், டாக்டர் கவர் இப்பொழுது தன் மசோதாவில் கேட்பதையும் ஒப்பிட்டுப் பார்ப்போம்:—

1 த்விஜாதி ஸ்திரீகளுக்குப் புருஷன் இறந்த பிறகுங்கூட நியோகம் கூடாதென விதிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் கவர் புருஷன் ஜீவதசையிலிருக்கும்பொழுதே எல்லா ஜாதி ஸ்திரீகளுக்கும் விவாஹத்தை ரத்து செய்துகொண்டு கௌரவமாய் நடந்து கொள்ள வேறு ஒருவனை விவாஹம் செய்ய சட்டம் கேட்கிறார்.

2. நியோகத்தில், ஸந்ததியில்லாமல் வம்சம் சூன்யமாவதாயிருந்தால் சில நிபந்தனைகளுக்குள்பட்டு, இறந்துபோன கணவனின் ஸஹோதரன் அல்லது ஸபிண்டர்களிலொருவன் பெரியோர்களுடைய உத்தரவின்பேரில் ருதுகாலத்தில் சேர்ந்து ஒரே ஒரு ப்ரஜையை உண்டுபண்ணுவது. டாக்டர் கவர் ஸ்திரீகள் எவ்வித நிர்ப்பந்தத்திற்குமுள்ளாகாமல் தனக்கிஷ்டமானவனுடன் கூடி பிள்ளை குட்டிகளைப் பெற்றுக்கொண்டு ஸுகமாய் வாழ்ந்துவர சட்டம் கேட்கிறார்.

மேலே குறிப்பிடப்பட்ட மனுஸ்மிருதிவசனங்களின் முன் நிலையில், டாக்டர் கவர் தன்னுடைய மசோதாவுக்கு அநுகூலமென நினைத்துக்கூறிய நாரதஸ்மிருதி வஸிஷ்டஸ்மிருதிவசனங்களும் மசோதாவில் கண்ட காரணங்களும், ஆடிக்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சின் கதியை அடைந்துவிட்டன.

இந்த மசோதா ஹிந்துமத சாஸ்திரங்களுக்கும் அநுஷ்டானங்களுக்கும் முற்றிலும் விரோதமானதாலும், ஸ்திரீபுருஷர்களுக்குள் ஒற்றுமைக்குறைவையும் ஜனங்களுக்குள் கலகத்தையும் விளைவிக்கக்கூடியதாகவுமிருப்பதால் இதைக் கவர்ன்மெண்டார் அடியோடு தள்ளிவிடக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தற்காலம் டில்லி அகில இந்திய சட்டஸபையின்முன் நிற்பது மிஸ்டர் ஹர்பிலாஸ் ஸர்தா என்பவரால் கொண்டுவரப்பட்டிருக்கும் விவாஹவயதுமசோதா (The Child Marriage Bill) ஹிந்து ஸ்திரீகளின் சொத்து உரிமை மசோதா, (The Inheritance Right of Hindu Women Bill) ஸர் ஹரிஸிங்கவர் கொண்டு வந்திருப்பது ஸம்போகவயதுநிர்ணயமசோதா (Age of Consent Bill) ஹிந்துவிவாஹரத்துமசோதா (The Hindu Marriages Dissolution Bill) ஆகமொத்தம் நான்கு. மிஸ்டர் ஸர்தா டாக்டர் கவர் இவ்விருவரும் டில்லி சட்டஸபைக்கு ஜனங்களால் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மெம்பர்கள். இவர்கள் ஜனங்கள் அபேக்ஷிக்காததும் பெரும்பான்மையோரால் ஆக்ஷேபிக்கப் படுகிறதுமான இம்மசோதாக்களைக் கொண்டுவந்து ஜனங் களின் மனதைப் புண்படுத்தி இம்மசோதாக்களில் ஸம்பந்த மில்லாத ராஜாங்கத்தாரிடத்தில் ஜனங்களுக்கு வெறுப்பையும் கோபத்தையும் விருத்திசெய்துவருகிறார்கள். இந்த மசோதாக் களை உங்கள் பிரதிநிதிகள் கொண்டுவந்திருக்கிறார்களேயன்றி தாங்கள் காரணமல்லவென்று கவர்ன்மெண்டார் ஜனங்களுக்கு பதில் சொல்லக்கூடும். அகில இந்திய சட்டஸபையும் மாகாண சட்டஸபைகளும் ஏற்பட்டது ராஜீயவிஷயங்களை நிதானிப்ப தற்கேயொழிய, மதஸம்பந்தமான விஷயங்களில் தலையிடுவதற் கல்ல. மசோதாக்களை அங்கீகரிக்கவும் தள்ளிவிடவும் அதிகாரம் ராஜாங்கத்தாரிடமே இருக்கிறபடியால், இந்த மசோதாக்களை முதலெடுப்பிலேயே ராஜாங்கத்தார் அங்கீகரிக்காமல் தள்ளியிருந் தால் தேசமெங்கும் இவ்வித மனக்குழப்பத்துக்கு இடமிரா தென்று ஜனங்கள் ராஜாங்கத்தார்மீது குறை கூறுகிறார்கள். இம் மசோதாக்களை இப்பொழுதாவது ராஜாங்கத்தார் அடியோடு தள்ளி, இனியும் இவ்வித மதஸம்பந்தமான மசோதாக்களை சட்ட ஸபைகளில் அங்கீகரிப்பதில்லையென்று ஒரு சட்டத்தை சாசுவத மாய் ஏற்படுத்தி, கனம் விக்டோரியாமஹாராணியாரவர்களின் வாக்குறுதியை நிறைவேற்றி ஜனங்கள் ராஜாங்கத்தாரிடத்தில் பூர்ணவிசுவாஸம் பாராட்டும்படி செய்வார்கள் என்று எதிர்பார்க் கிறோம்.

T. S. நடேசசாஸ்திரியார்,

வால்மீகி, மாய்வரம்.

---

317

உ

ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

நாகபட்டணம்

ஹிந்துமதாபிமானி ஸங்கத்தின்

ஆதரணையில் நடைபெறும்

கும்பகோணம் அத்வைதஸபாவின்

# 34-வது வருஷபூர்த்தி ஸமாஜம்.

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு 1928-ஹு ஜுலை-மீ 15உக்குச் சரியான விபவ-ஹு ஆனி-மீ 32உ பானுவாரம்முதல், ஒருவாரம் நாகபட்டணம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தாரின் ஆதரணையில் ஷை யூர் ஸ்ரீ சட்டநாதஸ்வாமிகோவிலில் கும்பகோணம் அத்வைதஸபையின் 34-வது வருஷாந்த ஸமாஜம் நடைபெறும்.

அன்றுமுதல் ஒருவாரம் காலை 7—30 மணிமுதல் 10 மணிவரையிலும், மாலை 3 மணிமுதல் 4-30 மணிவரையிலும், ஸ்ரீபகவத்கீதை, உபநிஷத், ஸ்ரீ பிரும்ம ஸூத்திர பாஷ்யங்களிலும், பிரகரணங்களிலும், லேகன வாசக பரீக்ஷைகளாலும், வாக்யார்த்தங்களாலும், பரீக்ஷைகள் நடத்தப்படும்.

தவிரவும், மறுபக்கத்திற்கண்ட விபரப்படி உபந்யாசங்களும், ஆடி-மீ 7உக்கு சரியான ஜுலை-மீ 22உ பானுவாரம் காலை 8-30 மணிக்கு ஸ்ரீ பரமாசார்யாளுடைய அனுக்ரஹத்துடன் கூடிய வித்வத்ஸன்மானங்களும் நடத்தப்படும்.

ஷை உபந்யாஸங்களை எல்லாரும் கேட்டு ஸபலமடையும்படி கோரப்படுகிறது.

நாகபட்டணம்,
1—7—28.

வரவேற்புக் கமிட்டியார்.

# உபந்யாஸ விபரம்

1928-ஜூலை-மீ

| உபந்யாஸகர். | இரவு 7 மணி முதல் 8-30 மணி வரையில் உபந்யாஸவிஷயம். | தேதி | கிழமை. | மாலே 5 மணி முதல் 6-30 மணி வரையில் உபந்யாஸ விஷயம் | உபந்யாஸகர். |
|---|---|---|---|---|---|
| கருங்குளம் சாஸ்த்ர திலகம வேதாந்த விபூஷணம் **பிரம்மஸ்ரீ க. ச. க்ருஷ்ண சாஸ்த்ரிகள்.** | ஸ்ரீபரமாசார்யாளுக்குஈச்வராவதாரத்வ ஸமர்த்தனம் | 15 | ஞாயிறு. | சைவாகம ப்ராமாண்யம் | போலகம் பிரம்மஸ்ரீ **ராமாசாஸ்த்ரிகள்.** |
| ஶ்ரீமன்னார்குடி சாஸ்த்ர திலகம் மஹோபதேசகர் **பிரம்மஸ்ரீ யக்ஞஸாமிசாஸ்திரிகள்.** | பிராமணர்களின் விவாஹம் நிஷேதகம் இவைகளின் காலநிர்ணயம். | 16 | திங்கள். | ஸ்ரீராமாயணம் ஸ்காந்தம் இவைகளில் சொல்லியபடி ஸ்ரீ ஸுப்ரமண்யரின் மாஹாத்ம்யம். | கருங்குளம், பிரம்மஸ்ரீ **வேங்கடநாராயண சாஸ்த்ரிகள்.** |
| திருவையாறு சாஸ்த்ர ரெத்னகரம் பிரம்மஸ்ரீ **விச்வநாத சாஸ்திரிகள்.** | வேத ப்ராமாண்யம். | 17 | செவ்வாய். | ஸ்ரீராமானுஜாசார்யஸ்வாமிகளால் அத்வைதமதத்தில் சொல்லப்படும் ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானம். | இஞ்சிக்கொல்லே பிரம்மஸ்ரீ **ஜகதீச்வர சாஸ்த்ரிகள்.** |
| ஷை பிரம்மஸ்ரீ யக்ஞ **ஸாமி சாஸ்த்ரிகள்.** | ஸ்ரீராமாயணத்தின் ப்ராமாண்யமும் அதன் உபயோகமும். | 18 | புதன். | அத்வைதமே கீதையின் தாத்பர்யம். | வரகூர் பிரம்மஸ்ரீ **V. S. ஸுப்ரமண்ய சாஸ்த்ரிகள்** |
| ஷை பிரம்மஸ்ரீ **க்ருஷ்ண சாஸ்த்ரிகள்.** | மனு, பராசரர் இவர்கள் சொல்லியபடி பிராமணர்களின் ஷட்கர்ம ஸமர்தனம். | 19 | வியாழன். | ஆத்மா ஸ்வப்ரகாசம். | பைங்காநாடு பிரம்மஸ்ரீ **ப. வைத்யநாதசாஸ்த்ரிகள்** |
| ஷை பிரம்மஸ்ரீ யக்ஞ **ஸாமி சாஸ்தரிகள்.** | பாகவத தர்மம். | 20 | வெள்ளி. | பௌத்த மதமும் அதன் கண்டனமும். | மரூர் பிரம்மஸ்ரீ **வைத்யநாதசாஸத்ரிகள்.** |
| ஷை பிரம்மஸ்ரீ விச்வ **நாத சாஸ்த்ரிகள்.** | மதபேத ப்ரகாரம் முக்திநிரூபணம். | 21 | சனி. | ஸ்ரீ வால்மீகி ராமாயணம் ஸ்ரீபாரதத்தில் சொல்லியபடி ராமோபாக்யானம்இவைகளின் ஸாமாரஸ்யமும் அதனல் ஏற்படும் நிர்ணயமும். | திருக்கழுக்குன்றம் பிரம்மஸ்ரீ **தி. வே, ராமசந்த்ர தீக்ஷிதர்.** |

319



**अथ भिन्नसङ्कलितव्यवकलितयोः करणसूत्रं वृत्तार्धम् ।**

**योगोऽन्तरं तुल्यहरांशकानां कल्प्यो हरो रूपमहारराशेः॥३५=॥**

अथ = जातिचतुष्टयनिरूपणानन्तरं, भिन्नानां संकलितव्यवकलितयोरित्यादि पूर्ववत् । तुल्यहरांशकानां— तुल्यौ हरौ ययोस्तौ तुल्यहरौ, तुल्याः हरा येषां ते तुल्यहराः, तुल्यहरौ च तुल्यहराश्च=तुल्यहराः, अंशकौ च, अंशकाश्च=अंशकाः, तुल्यहराश्च ते अंशकाश्च= तुल्यहरांशकाः, तेषां, तुल्यहरयोरंशकयोः, तुल्यहराणामंशकानां वेत्यर्थः। योगः= संकलनं, अंतरं =व्यवकलनं वा, कार्यमिति शेषः । भिन्नराशिनासार्धं यदि कश्चिदभिन्नराशिस्संयोजनीयतया वियोजनीयतया वा कथ्यते, तदा तस्य हराभावात् किं कर्तव्यमिति चेत्तत्राह— कल्प्य इति— अहारराशेः— न विद्यते हारो यस्य सः=अहारः, अहारश्चासौ राशिश्च= अहारराशिः, तस्य, रूपं=एकसंख्या, हरः=हारः, कल्प्यः । रूपे हरे कल्पिते राशेरविकृतत्वं प्रसिद्धम् । तुल्यहराणामंशानां समानजातितया योगोऽन्तरं वा कर्तुं युज्यते । तथा चोक्तं बीजगणिते— "योगोऽन्तरं तेषु समानजात्यो"रिति । अत्रोपपत्तिः स्फुटा ॥ ॥३५=॥

**अत्रोद्देशकः—**

**पञ्चांश,पाद,त्रिलवा,र्ध,षष्ठानेकीकृतान्ब्रूहि सखे ममैतान् ।**

**एभिश्च भागै रथ वर्जितानां किं स्यात्त्रयाणां कथयाऽऽशु शेषम् ॥**

न्यासः, $\frac{1}{5}+\frac{1}{4}+\frac{1}{3}+\frac{1}{2}+\frac{1}{6}=\frac{29}{20}$, ऐक्ये जातम् । अथैतैर्वर्जितानां त्रयाणां शेषं, $3-\frac{29}{20}=\frac{31}{20}$,

अत्र पूर्वार्धेन भिन्नसङ्कलितं, उत्तरार्धेन भिन्नव्यवकलितञ्चोदाह्रियते । पूर्वमिदं विवृतप्रायमेव । अत्रोक्तानां भिन्नराशीनां समच्छेदीकृतानां योगे जातं न्यासे दर्शितरीत्या स्फुटम् । सङ्कलने जातैर्भागैर्वर्जितानां त्रयाणां शेषं न्यासे दर्शितमिति स्पष्टार्थोऽयं श्लोकः ॥३६=॥ इति भिन्नसङ्कलितव्यवकलिते ।

**भिन्नगुणने करणसूत्रं वृत्तार्धम् ।**

अंशाऽऽहतिश्छेदवधेन भक्ता लब्धं विभिन्ने गुणने फलं स्यात् ॥

अत्रोद्देशकः—

सत्र्यंशरूपद्वितयेन निघ्नं ससप्तमांशद्वितयं भवेत्किम् ।

अर्धं त्रिभागेन हतं च विद्धि दक्षोऽसि भिन्ने गुणनाविधौ चेत् ॥

न्यासः , $(2+\frac{1}{3})\times(2+\frac{1}{7})$ , सवर्णिते , $\frac{7}{3}\times\frac{15}{7}$, जातम् । गुणिते च जातं, $\frac{5}{1}$, न्यासः, $\frac{1}{2}\times\frac{1}{3}=\frac{1}{6}$, गुणिते जातम् ।

अथ भिन्नगुणनं निरूपयति—भिन्नगुणन इति— अंशाऽऽहतिः= भिन्नराश्यो गुण्यगुणकभूतयोर्यावंशौ, तयोरंशयोराहतिः वधः, च्छेदवधेन =तयोरेव यौ च्छेदौ हरौ, तयोर्वधेन, भक्ता सती यल्लभ्यते, तत् लब्धं, विभिन्ने=भिन्नराशीये, गुणने फलं स्यात् । अत्रोपपत्तिः—हरयोर्घातो हरः, अंशयोर्घातोंशः, हरो भाजकः अंशस्तु भाज्य इत्युक्तमेव । अतोंश-योर्वधश्च्छेदवधेन भक्तो गुणनफलं भवतीत्युपपन्नम् । अत्रोदाहरणमाह—सत्र्यंशेति—सत्र्यंशरूपद्वितयेन=त्र्यंशसहितं यद्रूपद्वियं द्विसंख्या, तेन ससप्तमांशद्वितयं=सप्तमांशसहितं रूपद्वितयं, निघ्नं=हतं, किं भवेदित्ये-कमुदाहरणम् । त्रिभागेन=त्र्यंशेन, हतं=गुणितं, अर्धं च किमिति, विद्धि जानीहि, इत्यपरोदाहरणम् । भिन्ने=भिन्नराशीये, गुणनाविधौ, दक्षोऽसि चेत्=समर्थोऽसि यदीति प्रोत्साहनवचनम् । अत्र सत्र्यंशरूप-द्वितयं गुणकारः, स सप्तमांशद्वितयं गुण्यः, एतौ गुणगुण्यौ "च्छेदघ्न-रूपेष्वि"त्यादिना सवर्णीकृत्य जातौ $\frac{7}{3}$, $\frac{15}{7}$, अनयोरंशयोराहतिः, $7\times15=105$, च्छेदवधेन $3\times7=21$, अनेन भक्ता, $\frac{105}{21}$, एकविंशत्याऽ-पवर्तिता, 5, इदं गुणनफलम् । अथ वा भिन्नगुणने हरांशयोर्मिथो यो येनापवर्त्यते तं तेनापवर्त्य क्रिया निर्वाह्येत्युक्तरीत्या अंशभूता सप्तसंख्या हरभूतया सप्तसंख्ययाऽपवर्तिता । अन्यराशेरंशभूता पञ्चदशसंख्या इतर-राशिच्छेदभूतया त्रिसंख्ययाऽपवर्तिता तदेव फलं भवति । अनेनोदाहरणेन रूपभागानुबन्धजातिरपि परिशिक्षिता भवति । द्वितीयोदाहरणे गुणकः, $\frac{1}{3}$, गुण्यः, $\frac{1}{2}$, अत्रांशयोराहतिः, 1, च्छेदयोर्वधः; 6, अनेन भक्तांशाऽऽ

हतिर्गुणनफलमिति न्यासदर्शितरीत्या स्फुटम् । ननु प्रभागजातेर्भिन्नगुणनस्य च को भेदः? एकरूपत्वात्क्रियाक्रमस्येति चेत् । सत्यं, तथापि प्रधानस्य कस्यचिदंशिनोंऽशाः फलं प्रभागजातौ । भिन्नगुणने तु तथा नास्तीति फलतो विद्यत एव भेद इति हृदयम् । उदाहरणान्तराणि द्रष्टव्यानि ॥३८॥ इति भिन्नगुणनम् ॥

भिन्नभागहारे करणसूत्रं वृत्तार्धम् ।

छेदं लवं च परिवर्त्य हरस्य शेषः कार्योऽथ भागहरणे गुणनाविधिश्च ॥

अथ भिन्नभागहारं निरूपयति—भिन्नेति—हरस्य=भाजकस्य, छेदं=हरं, लवञ्च=अंशं च, परिवर्त्य=तयोर्विनिमयं कृत्वा, भिन्नभाजकस्य यो हरस्तमंशतया, अंशं च हरतया परिकल्प्येति यावत । अथ=अनन्तरं, परिकल्पिताभ्यां छेदांशाभ्यां भिन्नगुणनवत्, शेषः गुणनाविधिश्च भागहरणे=भागहारे, भिन्ने इति पूर्वसूत्रादनुवृत्तं, तेन भिन्नभागहारे इत्यर्थः । कार्यः=कर्तव्यः, फलमित्यनुवृत्त्य पूरणीयम् । "अंशाहतिश्छेदवधेन भक्ते"ति कृते भिन्नभागहारे फलं भवतीत्यर्थः । अत्रोपपत्तिः—द्वाभ्यामष्टौ भाज्याश्चेत, रेखिकोपरि अष्टसंख्या, तदधो द्विसंख्या च विलेख्या किल, तदाऽष्टसंख्या द्विभक्तेति ज्ञायते । द्विसंख्या च यदि भिन्नराशितया कल्पनीया, तदा तस्या रूपं हारः कल्प्यः । रूपच्छेदतया द्विसंख्ययाऽष्टौ भाज्या इत्युक्तं चेत्, द्विसंख्ययाऽष्टौ भाज्या इत्युक्तं स्यात् । तथा च भाजकस्थानस्थितायाः रूपच्छेदवत्या द्विसंख्यायाः छेदभूतं रूपमंशतया, अंशभूता च द्विसंख्या छेदतया विपरिवर्तनीया जाता । अनन्तरमंशभूतेन रूपेण गुणिताऽष्टसंख्या द्वाभ्यां भाज्येति शेषविधिरनुष्ठेयो जातः । अत इदमुपपन्नं "छेदं लवं च परिवर्त्य"त्यादि ॥ ॥३८॥

अत्रोद्देशकः—

सत्र्यंशरूपद्वितयेन पञ्च त्र्यंशेन षष्ठं वद मे विभज्य ।
दर्भीयगर्भाग्रसुतीक्ष्णबुद्धिश्चेदस्ति ते भिन्नहृतौ समर्था ॥३९॥

न्यासः, $\frac{5}{1} \div \frac{7}{3} = \frac{5}{1} \times \frac{3}{7} = \frac{15}{7} = 2 + \frac{1}{7}$, $\frac{1}{6} \div \frac{1}{3} = \frac{1}{6} \times \frac{3}{1} = \frac{1}{2}$ यथोक्तकरणेन जातम् ।

गुणनजफले गुण्यगुणकयोरन्यतरभक्तेऽन्यतरल्लभ्यत इति विलोम-क्रिययापि उपपत्तिसूचनाय गुणनोदाहरणद्वये गुणनजफलद्वयमेव भाज्य-त्वेन निर्दिश्य भागहारे उदाहरणद्वयमाह— सत्र्यंशेति— सत्र्यंश रूपद्वि-तयेन गुणनोदाहरणे गुणकतया निर्दिष्टेन, पञ्च=तत्रैव गुणनजफलतया निष्पन्नान्, विभज्य=भक्त्वा, वदेत्येकमुदाहरणम् । त्र्यंशेन गुणनोदाह-रणे गुणकतया निर्दिष्टेन, षष्ठं=तत्र गुणनजफलतया निष्पन्नं षष्ठांशं विभज्य वदेत्यपरमुदाहरणम् । हे सखे! ते=तव, दर्भीयस्य गर्भस्य गर्भ-वर्तिनो दर्भस्येति यावत् । अग्रमिव सुतीक्ष्णा=सुसूक्ष्मा, बुद्धिः, भिन्न हृतौ=भिन्नभजने, समर्थाऽस्ति चेद्वदेति उत्साहजनकं वचनम् । अत्र स-त्र्यंशरूपद्वयं सवर्णीकृत्य जातं, $\frac{7}{3}$, अयं भाजकः, रूपच्छेदकं पञ्चकं भाज्यः, हरस्य च्छेदांशौ विपरिवर्त्य जातौ च्छेदांशौ, $\frac{3}{7}$, अस्य छेदेन भाज्यस्य च्छेदं रूपं गुणयेत्, तदंशेन त्रिकेण पञ्चकं गुणयेत् । एवं जातं गुणनजफलं च्छेदेन विभज्य लब्धं ससप्तमांशद्वयं गुणनोदाहरणे गुण्यतया निर्दिष्टमिति न्यासदर्शितरीत्या सुविशदम् । इतरोदाहरणमपि न्यासद-र्शितरीत्या सुगमम् ॥३९॥ इति भिन्नभागहारः ॥

**भिन्नवर्गादौ करणसूत्रं वृत्तार्धम् ।**

**वर्गे कृती, घनविधौ तु घनौ विधेयौ हारांशयोरथ पदे च पदप्रसिध्यै ॥**

अथ भिन्नवर्गादिचतुष्टयं निरूपयति—भिन्नेत्यादि— भिन्नराशेर्वर्गे जिज्ञासिते, हारांशयोः=तदीयहरांशयोः, कृती वर्गौ, विधेये इति लिङ्ग-विपरिणामेन योज्यम् । भिन्नराशेः घनविधौ तु=घनकरणे तु, हारांशयोः =हरांशयोः, घनौ=समत्रिघातौ, विधेयौ=कार्यौ, अथ पदप्रसिध्यै= वर्गमूलघनमूलप्रसिध्यर्थं, हारांशयोः=हरांशयोः, पदे=तत्तन्मूले, विधेये। वर्गीकृतच्छेदेन वर्गीकृतांशे भक्ते वर्गजफलं, घनीकृतच्छेदेन घनीकृतांशे भक्ते घनजफलं, मूलीकृतेन च्छेदेन मूलीकृतांशे भक्ते मूलजं फलं लभ्यत इत्यर्थः । अत्रोपपत्तिः—भिन्नराशिर्हि भाज्यभाजकोभयात्मकः । तत्र भाजकवर्गेण भाज्यवर्गे भक्ते राशिवर्गो भवति, बीजगणिते—"वर्गेण वर्गं